## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

கல்வித் தகுதி - பொதுப் பணிகளில் நியமனம் செய்ய திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் உடற்கல்வி ஆசிரியர் பட்டயம் (Under Graduate Diploma in Physical Education offered by Sri Venkateswara University) அங்கீகாரம் செய்தல் - ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை

அரசாணை நிலை எண். 252

நாள் : 15.10.98

படிக்கப்பட்டவை :

1. அரசு ஆணை நிலை எண். 441, பணியாளர் மற்றும் நிாவாகச் சீர்திருத்தத் துறை, நாள் :20.12.93.

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித எண்.178998/ எண் .4/91, நாள்: 27.09.94.

3. தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண்.6180/RND-A.5/96, நாள் : 13.5.98.

------------

ஆணை :

பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள தனது கடிதத்தில் ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தில் பெற்றுள்ள உடற்கல்வி ஆசிரியர் சான்றிதழ் இம்மாநில உடற்கல்வி ஆசிரியர் சான்றிதழுக்கு இணையானது என மதிப்பீடு செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்,

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் அங்கீகாரம் குறித்த கோரிக்கை இதற்கென அரசு ஆணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் : 20.12.93- ன் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் அமைக்கப்பட்ட குழுவின் (Committee) முன்னர் பரிந்துரைக்காக வைக்கப்பட்டது. 23.4.98 அன்று நடந்த மேற்படி குழுக் கூட்டத்தில் திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் உடற்கல்வி ஆசிரியர் பட்டயப் படிப்பை (Under Graduate Diploma in Physical Education offered by Sri Venkateswara University) சென்னை ஒய்.எம்.சி.ஏ உடற்பயிற்சி கல்லூரியால் வழங்கப்படும் சான்றிதழிற்கு (Higher

Grade Certificate in Physical Education of Y.M.C.A. College of Physical Education, Chennai) இணையானது என்றும் பொதுப்பணிகளில் வேலைவாய்ப்பிற்கு அங்கீகாரம் அளிக்க குழு தீர்மானித்து அதனடிப்படையில் தேர்வாணையம் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

3. குழுவின் பரிந்துரைகளை அரசு தீவிர பரிசீலனை செய்து அதனை ஏற்று திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் உடற்பல்வி ஆசிரியர் பட்டயப் படிப்பை (Under Graduate Diploma in Physical Education) சென்னை ஒய்.எம்.சி.ஏ உடற்பயிற்சி கல்லூரியில் வழங்கப்படும் சான்றிதழிற்கு (Higher Grade Certificate in Physical Education awarded by Y.M.C.A. College of Physical Education, Chennai) இணையானது என்றும் பொதுப்பணிகளில் வேலைவாய்ப்பிற்காக அங்கீகரிக்கவும் ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. பிரகாஷ்,
அரசு செயலர்

பெறுநர்

அனைத்து செயலர்கள், தலைமைச் செயலகம். சென்னை – 9.
அனைத்து துறைத் தலைமை அலுவலர்கள்,
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை -2.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.

நகல் :-

அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையில் அனைத்துப் பிரிவுகள்.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9.
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.

/ஆணைப்படி /அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்